# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



**உறுப்பினர் செயலர், மாமல்லபுரம் புதுநகர் வளர்ச்சி குழுமம்,**
**மாமல்லபுரம் அவர்களின் நடவடிக்கைகள்**
**முன்னிலை : திருமதி.பு. கவிதா, B.E, M.Plan.,**

ந.க.எண்.140/ 2018 மாபுநவகு. நாள் :24.12.2018

பொருள்: தொகுப்பு கட்டிடம் - மாமல்லபுரம் புதுநகர் வளர்ச்சி குழுமம் , மாமல்லபுரம் - காஞ்சிபுரம் மாவட்டம் திருக்கழுக்குன்றம் வட்டம், மாமல்லபுரம் பேரூராட்சி - பூஞ்சேரி கிராமம், சர்வே எண்கள்.61/1Apt, 61/1Bpt, 61/2A, 61/2B1pt (ம) 61/2B2pt-ல் 8690.153 சமீ (2.1474 ஏக்கர்) பரப்பளவு மனை இடத்தில் ஏற்கனவே தரைதளம் + மூன்று தளங்களில் 3 பிளாக்குகள் அமையும் குடியிருப்பு கட்டிடங்களுக்கு உறுப்பினர் செயலர் மாமல்லபுரம் புதுநகர் வளர்ச்சி குழுமம் ந.க.எண்.466/2015/மாபுநவகு, நாள்: 28.3.16 கடிதம் மூலம் திட்ட அனுமதி வழங்கப்பட்டதில் தற்போது பிளாக் 1ல் மட்டும் சில திருத்தங்களுடன் அனுமதி கோரியதற்கு திட்ட அனுமதி வழங்குதல் - தொடர்பாக

பார்வை :
1. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் செயலாணைக் கடிதம் ந.க.எண் :9610/2018/பிஎ2 நாள் :8-11.2018
2. மனுதாரர் தி/ள் Arun Excello Foundations அவர்களின் கடிதம் நாள் :2.4.18 (ம) 25.8.18
3. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் செயலாணைக் கடிதம் ந.க.எண் :19746/2015/பிஎ2 நாள் :29.12.15
4. உறுப்பினர் செயலர் (பொ), மாமல்லபுரம் புதுநகர் வளர்ச்சி குழுமம் அவர்களின்செயலாணைக்கடிதம் ந.க.எண் :466/2015/மாபுநவகுநாள் :28.3.16
5. அரசாணை (நிலை) எண் :86, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, நாள் :28.3.2012 .
6. அரசாணை (நிலை) எண் :85, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, நாள் :16.5.2017 .
7. அரசாணை (நிலை) எண் :135, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, நாள் :21.7.2017 .
8. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் :7486/2009/பிஎ2 நாள் :16.4.2009
9. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் :21075/2009/பிஎ1 நாள் :4.4.2012
10. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் :12201/2017/Spl cell நாள் :28.9.17
11. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் :14227/2017/ Spl cell நாள் :14.12.2017
12. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள் : 28.11.2018 Completion Certificate கட்டணம் செலுத்த கோரியது,
13. மனுதாரர் தி/ள் Arun Excello Foundations அவர்களின் Completion Certificate கட்டணம் செலுத்தியதற்கான கடிதம் நாள் :4.12.18
14. 78 - வது மாமல்லபுரம் புதுநகர் வளர்ச்சி குழும கூட்ட தீர்மானம் எண்.2 நாள்: 19.12.2018

For ARUN EXCELLO FOUNDATIONS

Authorised Signatory

Scanned by CamScanner

<u>உத்திரவு</u>

மாமல்லபுரம் புதுநகர் வளர்ச்சி குழுமம், மாமல்லபுரம் - காஞ்சிபுரம் மாவட்டம் திருக்கழுக்குன்றம் வட்டம், மாமல்லபுரம் பேரூராட்சி - பூஞ்சேரி கிராமம், சர்வே எண்கள்.61/1Apt, 61/1Bpt, 61/2A, 61/2B1pt (ம) 61/2B2pt-ல் 8690.153 சமீ (2.1474 ஏக்கர்) பரப்பளவு மனை இடத்திற்கு பார்வை 3 மற்றும் 4-ல் சுட்டிய செயலாணைக் கடிதம் மூலம் தரைதளம் + மூன்று தளங்களில் 3 பிளாக்குகள் அமையும் குடியிருப்பு கட்டிடங்களுக்கு திட்ட அனுமதி வழங்கப்பட்டது. தற்போது பிளாக் 1-ல் சில திருத்தங்களுடன் உத்தேசம் பெறப்பட்டது, திருத்திய குடியிருப்பு மற்றும் வணிக உபயோக கட்டமானத்திற்கு பார்வை 1-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் செயலாணைக் கடிதத்தில் சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன் திட்ட அனுமதி வழங்க இசைவு அளிக்கப்பட்டுள்ளது அதன் பரப்பளவு விவரம் கீழ்கண்டவாறு பட்டியலிடப்படுகிறது.

<u>கட்டிட பரப்பு விவரம்</u>

| வ.எண் | கட்டிடம்/தளங்கள் | FSI பரப்பு சமீ | Non FSI பரப்பு சமீ | மொத்த பரப்பு சமீ | உபயோகம் |
|---|---|---|---|---|---|
| 1 | பிளாக் 1 (Revised) | | | | |
| | தரைதளம் கடை பகுதி | 252.17 | 2.80 | 530.17 | குடியிருப்பு-4 (ம) Shop |
| | குடியிருப்பு பகுதி | 261.68 | | | |
| | முதல் தளம் | 505.92 | 2.80 | 539.79 | குடியிருப்பு-8 |
| | இரண்டாம் தளம் | 505.92 | 2.80 | 539.79 | குடியிருப்பு-8 |
| | மூன்றாம் தளம் | 505.92 | 2.80 | 539.79 | குடியிருப்பு-8 |
| 2 | பிளாக் 2 (Existing) | | | | |
| | தரைதளம் | 1145.29 | 22.82 | 1197.43 | குடியிருப்பு-22 |
| | முதல் தளம் | 1141.37 | 22.82 | 1201.43 | குடியிருப்பு-22 |
| | இரண்டாம் தளம் | 1141.37 | 22.82 | 1201.43 | குடியிருப்பு-22 |
| | மூன்றாம் தளம் | 1141.37 | 22.82 | 1201.43 | குடியிருப்பு-22 |
| 3 | பிளாக் 3 (Existing) | | | | |
| | தரைதளம் | 1555.68 | 19.69 | 1744.66 | குடியிருப்பு-26 |
| | முதல் தளம் | 1600.02 | 19.81 | 1760.50 | குடியிருப்பு-28 |
| | இரண்டாம் தளம் | 1600.02 | 19.81 | 1760.50 | குடியிருப்பு-28 |
| | மூன்றாம் தளம் | 1600.02 | 19.81 | 1760.50 | குடியிருப்பு-28 |
| | மொத்தம் | 12,956.75 | 181.60 | 13977.42 | குடியிருப்பு-226+ Shop - 1 |

**FSI Area = 12,956.75 சமீ**

**For ARUN EXCELLO FOUNDATIONS**

**Authorised Signatory**

Scanned by CamScanner

மேற்கண்ட திருத்திய குடியிருப்பு மற்றும் வணிக உபயோக கட்டுமானத்தின் கட்டிட வரைபடத்திற்கு க.வ/ந.ஊ.இ.எண்:271/2018 என எண்ணிட்டு பெறப்பட்டுள்ளது.

பார்வை 14-ல் கண்ட 78 - வது மாமல்லபுரம் புதுநகர் வளர்ச்சி குழும கூட்ட தீர்மானம் எண்.2 நாள்: 19.12.2018 - ல் திட்ட அனுமதி வழங்க தீர்மானம் பெறப்பட்டுள்ளது.

நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களால் இசைவளிக்கப்பட்ட கட்டுமானத்திற்கு கீழ்கண்ட கட்டணங்கள் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

1. Completion Certificate - க்கான கட்டணம் ரூ.69,500/- (ரூபாய் அறுபத்தொன்பதாயிரத்து ஐநூறு மட்டும்) தற்பொழுது பெறப்பட்டுள்ளது.

2. ஏற்கனவே மனுதாரரால் 1.அபிவிருத்தி கட்டணம் ரூ.2,50,000/-(ரூபாய் இரண்டு லட்சத்தி ஐம்பதாயிரம் மட்டும்) 2. நன்னிலை வரி கட்டணம் ரூ.23,500/-(ரூபாய் இருபத்தி மூன்றாயிரத்தி ஐநூறு மட்டும்) 3. உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதி கட்டணம் ரூ.48,75,000/-(ரூபாய் நாற்பத்தி எட்டு லட்சத்தி எழுபத்தி ஐந்தாயிரம் மட்டும்) பெறப்பட்டுள்ளது.

மனுதாரரால் செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் முழுமையாக செலுத்தப்பட்டுள்ளது,

கட்டிட அனுமதிக்கு இசைவளிக்கப்பட்ட இட அமைப்பு வரைபடத்தில் கண்டுள்ள பொது ஒதுக்கீடு திறவிடம் ஏற்கனவே மாமல்லபுரம் பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. (நில அளவை எண்: 68/2B1pt, 61/2A = 878.00 Sq.mtr,. தான பத்திர எண்: 405/2016, நாள்: 3.2.2016)

மேற்படி திருத்திய குடியிருப்பு மற்றும் வணிக பகுதி உபயோக கட்டிட வரைபடங்களுக்கு நகர் ஊரமைப்பு சட்டம் 1971, பிரிவு 49(i)(ii)(iii) ன் கீழ் திட்ட அனுமதி எண்: 2 (1 முதல் 6 வரை) /2018 என எண்ணிடப்பட்டு திட்ட அனுமதி வழங்கப்படுகிறது.

இந்த திட்ட அனுமதி நகர் ஊரமைப்பு சட்டம் 1971, பிரிவு 50-ன் படி திட்ட அனுமதி அளிக்கப்பட்ட தினத்திலிருந்து 24.12.2018 முதல் 23.12.2023 வரை ஐந்து ஆண்டுகளுக்கு மட்டுமே செல்லத்தக்கதாகும்

<u>சிறப்பு நிபந்தனைகள்.</u>

1. It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.
2. Planning Permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local bodies Act. Planning Permissions is issued subject to the condition that the applicant/developer and also the architects/Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.
3. " நகர் ஊரமைப்பு துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிபடுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரயபத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகாரப் பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது .

For ARUN EXCELLO FOUNDATIONS

Authorised Signatory

Scanned by CamScanner

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிபடுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன்மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதி மன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்பு துறை பொருத்தமான அமைப்பு அல்ல."

4. மத்திய மற்றும் மாநில அரசு துறையினரிடமிருந்து பெறப்பட்ட தடையின்மை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

5. The provisions in the G.O.(M.s) No.17, Housing and Urban Development (UD4(3) Department dated 05.02.2016 relating to installation and use of Solar Energy system should be followed.

6. பார்வை 10-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின் படி "The TamilNadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated :22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The Promotor has to advertise, Market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate project or part of it only after registering the Real Estate project with the Real Estate Regulatory Authority"

<u>நிபந்தனைகள் :</u>

1. திருத்திய குடியிருப்பு மற்றும் வணிக பகுதி உபயோக கட்டுமானத்திற்கு solar Water Heating system அமைக்கப்பட வேண்டும்.
2. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.
3. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலைநிறுத்தப்பட வேண்டும்.
4. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
5. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:11.10.02-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
6. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.
7. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத்தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசுத் தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.
8. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.
9. அரசாணை எண்.341, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள்:03.11.2004-ன்படி செப்டிக் டேங்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்.
10. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு FLY ASH BRICKS மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.

For ARUN EXCELLO FOUNDATIONS

Authorised Signatory

Scanned by CamScanner

11. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

12. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின், அசல் நகலுடன் ஏற்கனவே அளிக்கப்பட்ட உத்திரவு மற்றும் இவ்வாணையின் நகல் வாங்குபவர்களுக்கு வழங்க வேண்டும்.

13. உத்தேசம் குறித்து கழிவு நீர் வெளியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரிய சட்டம் 1974 பிரிவு 25 (Water Act)-ன் படி மேற்படி வாரிய இணக்கம் (Consent) பெறப்பட வேண்டும்.

திட்ட அனுமதி அளிக்கப்பட்ட உத்தரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் இரண்டு தொகுப்புகள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

மனுதாரர் மேற்கொண்டு மாமல்லபுரம் பேரூராட்சி செயல் அலுவலரை அணுகுமாறு தெரிவிக்கப்படுகிறார்.

மேலும் திட்ட அனுமதி அளிக்கப்பட்ட உத்தரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் இரண்டு தொகுப்பு பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை சான்றினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு மாமல்லபுரம் பேரூராட்சி செயல் அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

24/12/18

உறுப்பினர் செயலர்
மாமல்லபுரம் புதுநகர் வளர்ச்சிக் குழுமம்,
மாமல்லபுரம்.

24/12/18

இணைப்பு
ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்கள் இரண்டு தொகுப்பு

பெறுநர்
செயல் அலுவலர், மாமல்லபுரம் பேரூராட்சி, மாமல்லபுரம்.

நகல்
M/s Arun Excello Foundations,
Bhattad Towers,
No.18, West Cott Road,
Royapettah,
Chennai 600 014.

For ARUN EXCELLO FOUNDATIONS

Authorised Signatory

Scanned by CamScanner

BLOCK

**மாமல்லபுரம் சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலர்(பொ) அவர்களின் நடவடிக்கைகள்**

**பிறப்பிப்பவர் : திரு. மா. கேசவன்**

நாள். 01. 03.2019

மூ. மு. எண். 32 /2019/அ1

க.உ..அ.எண்.07 / 2018-2019

பொருள் : கட்டிட உரிமம் – காஞ்சிபுரம் மாவட்டம் – மாமல்லபுரம் சிறப்புநிலை பேரூராட்சி – திருக்கழுக்குன்றம் வட்டம்– பூஞ்சேரி கிராமம் சர்வே எண்கள். 61/1Apt, 61/1Bpt, 61/2A, 61/2B1pt மற்றும் 61/2B2pt-ல் 8690.153 ச.மீட்டர் (2.1474 ஏக்கர் ) பரப்பளவு கொண்ட மனையிடத்தில் மனை ஒப்புதலும் அம்மனையில் G+3 தளங்களில் 3 பிளாக்குகளில் அமையும் தொகுப்பு குடியிருப்பு கட்டிடங்கள் மற்றும் Multi purpose Hall கட்டிடம் ஏற்கனவே திட்ட அனுமதி வழங்கப்பட்டதில் தற்போது பிளாக் 1ல் மட்டும் சிறு திருத்தங்களுடன் அனுமதி கோரியதற்கு குடியிருப்பு மற்றும் வணிக கட்டிடங்களுக்கு திருத்திய கட்டிடம் கட்டுவதற்கு – கட்டிட வரைபடம் அங்கீகரித்தல் – தொடர்பாக

பார்வை :

1) M/s. Arun Excello Foundation No.18, Bhattad Tewers, West Cott Road , Rayapattai Chennai -14 மனு கடிதம் நாள். 24.01.2019
2) உறுப்பினர் செயலர், மாமல்லபுரம் புதுநகர் வளர்ச்சிக்குழுமம் அவர்களின் கடித ந.க.எண். 140/2018 மாபுவகு நாள். 24.12.2018
3) இவ்வலுவலக செலுத்து சீட்டு எண். 1163 /2018–19 நாள்.01. 03.2019
4) தொடர்புடைய ஆவணங்கள்.

*****

**உத்திரவு:**

காஞ்சிபுரம் மாவட்டம், மாமல்லபுரம் சிறப்புநிலை பேரூராட்சிக்குட்பட்ட பூஞ்சேரி கிராமம் சர்வே எண்கள். 61/1Apt, 61/1Bpt, 61/2A, 61/2B1pt மற்றும் 61/2B2pt-ல் 8690.153 ச.மீட்டர் (2.1474 ஏக்கர் ) பரப்பளவு கொண்ட மனையிடத்தில் மனை ஒப்புதலும் அம்மனையில் G+3 தளங்களில் 3 பிளாக்குகளில் அமையும் தொகுப்பு குடியிருப்பு கட்டிடங்கள் மற்றும் Multi purpose Hall கட்டிடம் ஏற்கனவே திட்ட அனுமதி வழங்கப்பட்டதில் தற்போதுபிளாக் 1ல் மட்டும் சிறு திருத்தங்களுடன் அனுமதி கோரியதற்கு குடியிருப்பு மற்றும் வணிக கட்டிடங்களுக்கு திருத்திய கட்டிடம் கட்டுவதற்கு பணிகள் மேற்கொள்ள **M/s. Arun Excello Foundation** என்பவருக்கு நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதி வழங்கப்படுகிறது. இக்கட்டிடம் கட்டுவதற்கான வரைபட அனுமதி உரிமம் மூன்றாண்டிற்கு அதாவது **01.03.2019** முதல் **28.02.2022** வரை அமுலில் இருக்கும். அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

**நிபந்தனைகள்**

1. வரைபடத்தில் தற்போது கட்டப்பட்டுள்ள சாலை மையதடுப்பானையின் மையத்திலிருந்து 23.0 மீ தூரத்திற்கு அப்பால் மேற்படி புல எண்ணில் புதிய கட்டுமானங்களை அமைத்து கொள்ள வேண்டும்.
2. கட்டிடம் கட்டப்படும் இடத்தில் இரண்டு பக்கங்களிலும் 5 அடி இடைவெளியும் மற்றும் தெருவிற்கும், கட்டிடத்திற்கும் முன்புறம் 5 அடி இடைவெளியும், பின்புறம் 5அடி இடைவெளியும் விட்டு கட்டிடம் கட்டப்பட வேண்டும்.
3. இந்த உத்திரவானது இச்சிறப்பு நிலை பேரூராட்சி நிர்ணயிக்கப்பட்ட தீர்மானப்படி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் மற்றும் விதிகளுக்குட்பட்டு வழங்கப்படுகிறது.
4. எக்காரணத்தை முன்னிட்டும் சிறப்பு நிலை பேரூராட்சிக்குட்பட்ட இடத்தையோ அல்லது அரசிற்கு சொந்தமான இடத்தையோ ஆக்கிரமணம் செய்யக் கூடாது. மீறி ஆக்கிரமிப்பு செய்தல் ஆக்கிரமணப் பகுதியை எவ்வித முன் அறிவிப்புமின்றி இடித்து அப்புறப்படுத்தப்படும்.

For ARUN EXCELLO FOU...

Authorised Signatory

Scanned by CamScanner

5. அங்கீகரிக்கப்பட்ட கட்டிட வரைபடங்கள் கட்டிடம் கட்டப்படும் இடத்தில் வேலை நடந்தேறிக் கொண்டிருக்கும் போது எந்த நேரத்திலும் செயல் அலுவலர் அவர்களோ அல்லது அவரால் அதிகாரம் பெற்றவரோ ஆய்வு செய்யும் போது ஆஜர்படுத்த வேண்டும்.
6. கட்டிடம் அனுமதிக்கப்பட்ட கால அளவிற்குள் கட்டி முடிக்காவிடில் முன் கூட்டிய உரிமக் கட்டணம் செலுத்தி உரிமம் புதுப்பித்துக்கொள்ள வேண்டும்.
7. அங்கீகரிகப்பட்ட வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளபடி கட்டிடம் கட்டாமல் மாறுதல் செய்ய நேர்ந்தால் அதற்கான வரைபடம் கொடுத்து நிர்வாக அதிகாரி அவர்களின் முன் அங்கீகாரம் பெறப்பட்டு பிறகு கட்டிடம் கட்டப்பட வேண்டும்.
8. கட்டபப்படும் புதிய கட்டிடத்தில் மழை நீர் சேகரம் கட்டப்பட வேண்டும்.
9. கட்டப்படும் கட்டிடத்தில் உபயோகப்படுத்தப்படும் கழிவு நீர் செல்ல மனுதாரர் இடத்திற்குள் நீர் உறிஞ்சு குழிகள் கட்டிக் கொள்ள வேண்டும். கழிவு நீர் பொது சாலையில் தேங்கி நிற்க அனுமதி கிடையாது.
10. மனுதாரர் தன் சொந்த இடத்தில் கழிப்பிடம் கண்டிப்பாக கட்டப்பட வேண்டும். தவறினால் இந்த உத்திரவை எவ்வித முன் அறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.
11. மனுதாரர் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளபடி கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டதும், நிர்வாகஅதிகாரி அவர்களுக்கு எழுத்து மூலமாக தகவல் தெரிவித்து குடியிருப்புக்காக சான்றிதழ் பெற்றுக்கொள்ள வேண்டியது.
12. கட்டிடம் கட்டப்படுவதற்கு வழுங்கப்பட்ட உரிமத்திற்குட்பட்ட இடத்திற்கு , நீதி மன்றம் அல்லது அரசினால் காலி செய்ப நேரிட்டால் எவ்வித நஷ்ட ஈட்டிற்கும் சிறப்பு நிலை பேரூராட்சி நிர்வாகத்தினை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது.
13. அனுமதி வழங்கப்பட்ட கட்டிடம் தவிர வேறு கட்டிடம் ஏதேனும் அனுமதியின்றி கட்டப்பட்டு இருப்பது ஆய்வின்போது கண்டறியப்பட்டால் இந்த அனுமதி ரத்து செய்யப்பட்டு நகராட்சி விதிகளின்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.
14. மாமல்லபுரம் புதுநகர் வளர்ச்சிக்குழும நிபந்தனைகள் மற்றும் விதிகளுக்குட்பட்டு கட்டிடம் கட்டப்பட வேண்டும்
15. இந்திய தொல்பொருள் ஆய்வுத்துறையின் மூலம் பின்வரும் காலங்களில் விதிமுறை பின்பற்றாமல் கட்டப்பட்டிருப்பின் அதனை இடிக்க முழு உரிமை உள்ளது. இதில் பேரூராட்சி பொறுப்பாகாது.
16. அரசு காரியங்களுக்காக நிலம் ஆர்ஜிதம் செய்யப்படும் போது இதற்கு பேரூராட்சி பொறுப்பாகாது.
17. ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட கடற்கரை பகுதி விதிகளுக்குட்பட்டு கட்டிடம் கட்டப்பட வேண்டும்.
18. தணிக்கை துறையினரால் தடையேதும் எழுப்பப்பட்டால் தொகையினை முழுவதுமாக செலுத்தப்படவேண்டும். தவறும் பட்சத்தில் கட்டிட உரிமத்தை ரத்து செய்யப்படும்.
19. மேற்படி கட்டுமான இடத்தின் நில உரிமை குறித்து ஏதேனும் வில்லங்கள் ஏற்படும் பட்சத்தில் அதற்க்கு நில உரிமையாளரே பொறுப்பாவார். அதனை அவர்களே முன்னின்று தீர்த்து கொள்ளப்படவேண்டும்

1/3/19

செயல் அலுவலர்
மாமல்லபுரம் சிறப்பு நிலை பேரூராட்சி
காஞ்சிபுரம் மாவட்டம்.

இணைப்பு வரைபடங்கள்

<u>பெறுநர்</u>

M/s. Arun Excello Foundation
No.18, Bhattad Tewers] West
Cott Road , Rayapattai Chennai -14.

For ARUN EXCELLO FOUNDATIONS

Authorised Signatory

Scanned by CamScanner

## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate